**தலைப்பு 260 - நுவரெலியா மாவட்டச் செயலகம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2015 ஆம் ஆண்டு**

---

நுவரெலியா மாவட்டச் செயலகத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கும் இணக்கக் கூற்றும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2016 ஜுன் 06 ஆந் திகதியன்று மாவட்டச் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள், கருத்துரைகள், கண்டுபிடிப்புகள் என்பன கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு மற்றும் கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது செவ்வை பார்த்தலின் அடிப்படையில் அமைந்தனவாகும். அவ்வாறான செவ்வை பார்த்தல்களின் நோக்கெல்லை மற்றும் அளவு என்பன எனக்குக் கிடைக்கப் பெற்ற பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் நேரம் என்னும் வரையறைக்குட்பட இயலுமானளவு விரிவானதோர் கணக்காய்வை மேற்கொள்ளக் கூடியவாறு தயாரிக்கப்பட்டனவாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான பிரதான கணக்கீட்டு உத்தியோகர்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புகள்**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 148,149,150, 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச் சட்ட ஏற்பாடுகள், அரச நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கிசையப் பேணப்படுதல், தயாரிக்கப்படுதல், நியாயபூர்வமாகச் சமர்ப்பிக்கப்படுதல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு ஆகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக் கூடிய தவறான கூற்றுக்கள் அல்லாத கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்து, நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாட்டைத் தயாரித்தல், அமுலாக்குதல், பேணுதல் என்பனவும் இப்பொறுப்பில் உள்ளடங்கும்.

**2. கணக்குகள்**

---

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

**(அ) மொத்த நிதியேற்பாடும் செலவினமும்**

---

மாவட்டச் செயலகத்திற்கென ஏற்பாடு செய்யப்பட்ட மொத்த தேறிய நிதி ரூபா ரூபா 485.3 மில்லியன் ஆகும். அதில் ரூபா 459.16 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கமைய, மாவட்டச் செயலகத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்ட மொத்த தேறிய நிதியேற்பாட்டின் 5 சதவீதமான ரூபா 26.14 மில்லியன் சேமிக்கப்பட்டிருந்தது. விபரம் பின்வமாறு.

**2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு**

| செலவினம் | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | சேமிப்பு, தேறிய நிதியேற்பாட்டின் சதவீதமாக |
|---|---|---|---|---|
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டுவருவன | 435.30 | 423.76 | 11.54 | 2.65 |
| மூலதனம் | 50.00 | 35.40 | 14.60 | 29.20 |

| | | | | |
|---|---|---|---|---|
| மொத்தம் | 485.30 | 459.16 | 26.14 | **5.39** |

**(ஆ) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்தல்**

பல்வேறு பணிகளுக்காக மாவட்டச் செயலகத்திற்கு 20 அமைச்சுக்களும் 19 திணைக்களங்களும் முறையே ரூபா 1,940.85 மில்லியன் மற்றும் ரூபா 313.86 மில்லியன் என மொத்தமாக ரூபா 2,254.71 மில்லியன் நிதியேற்பாட்டை வழங்கியிருந்ததுடன், மீளாய்வாண்டு முடிவளவில் அதில் முறையே ரூபா 1,603.32 மில்லியன் மற்றும் ரூபா 216.71 மில்லியன் என மொத்தமாக ரூபா 1,820.03 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கமைய, ஏற்பாடு செய்யப்பட்ட நிதியில் முறையே ரூபா 337.53 மில்லியன் மற்றும் ரூபா 97.15 மில்லியன் என மொத்தம் ரூபா 434.68 மில்லியன் நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

## 2.2 முற்பணக் கணக்கு

### 2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட வரம்புகள்**

மாவட்டச் செயலகத்திற்குரிய விடய இலக்கம் 26001 என்பதன் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கின் பொருட்டு பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட வரம்புகளும் உள்ளவாறான பெறுமதியும் கீழே காணப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவு | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| அதிகூடிய வரம்பு | உள்ளவாறானது | அதிகுறைந்த வரம்பு | உள்ளவாறானது | அதிகூடிய வரம்பு | உள்ளவாறானது |
| ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் |
| 29.00 | 24.37 | 19.00 | 26.04 | 92.00 | 69.33 |

## 2.3 கட்டுநிதிக் கணக்கு

மாவட்டச் செயலகத்தின் கீழுள்ள 7002/0000/00/0307/0015/000 ஆம் கட்டு நிதிக் கணக்கின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி ரூபா 223.4 மில்லியன் ஆகும்.

## 2.4 பொது வைப்புக் கணக்கு

மாவட்டச் செயலகத்தின் கீழ்வரும் 05 பொது வைப்புக் கணக்குகளில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதிகளது கூட்டுத்தொகை ரூபா 263.86 மில்லியன் ஆகும். விபரம் கீழே காணப்படுகின்றது.

| வைப்புக் கணக்கு இலக்கம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| 6000/0000/00/0001/0047/000 | 11.16 |
| 6000/0000/00/0002/0063/000 | 0.09 |
| 6000/0000/00/0016/0016/000 | 166.47 |
| 6000/0000/00/0017/0003/000 | 57.74 |
| 6000/0000/00/0018/0019/000 | 28.40 |
| | 263.86 |

### 2.5 கணக்காய்வு அவதானிப்புகள்

மாவட்டச் செயலகத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கும் இணைக்கக் கூற்றும் மேலே 1.1 ஆம் பந்தியில் சுட்டிக் காட்டப்பட்டவாறான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகளுக்குட்படத் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அந்த முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் உள்ளடங்கிய கணக்காய்வு அவதானிப்புகளில் போதியதும் முக்கியமானதுமான கணக்காய்வு அவதானிப்புகள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. போதியதும் முக்கியமானதுமான கணக்காய்வு அவதானிப்புகள்

### 3.1 ஏடுகள் மற்றும் புத்தகங்களைப் பேணாமை

1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்கத் திறைசேரிச் சுற்றறிக்கையின் பிரகாரம் பேணப்பட வேண்டிய நிலையான சொத்துப் பதிவேடு 2015 திசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் நாளதுவரையாக்கப்பட்டு பேணப்பட்டிருக்கவில்லை.

### 3.2 கணக்காய்வு ஐய வினாக்களுக்குப் பதில் வழங்குதல்

மீளாய்வாண்டின்போது மாவட்டச் செயலகத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட 22 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு 2016 மாாச் 31 ஆந் திகதியளவிலும் பதில் வழங்கப்படாததுடன், அந்த ஐய வினாக்களுக்குரிய கணிப்பிடக்கூடிய கொடுக்கல் வாங்கல்களது பெறுமதி ரூபா 319.28 மில்லியன் ஆக இருந்தது.

### 3.3 ஒதுக்கீட்டுக் கணக்கு

#### 3.3.1 பாதீட்டு முரண்

நிதிப்பிரமாணம் 94(1) க்கு முரணாக 4 செலவின விடயங்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்ட தேறிய நிதியேற்பாட்டிற்கு அதிகமாக ரூபா 3,345,384 பொறுப்புக்கள் ஏற்பட்டிருந்தன.

## 3.3.2 ஏனைய அமைச்சுக்களினதும் திணைக்களங்களங்களினதும் நிதியேற்பாடு

இது சம்பந்தமாகப் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பல்வேறு அமைச்சுக்களால் மாவட்டச் செயலகத்திற்கு வழங்கப்பட்ட நிதியேற்பாட்டின் மூலம் அமுலாக்கப்பட்ட செயற்திட்டங்களில் பின்வருமாறு குறைபாடுகள் வெளியாகின.

| | நிதியேற்பாட்டை வழங்கிய அமைச்சு | அமுலாக்கிய செயற்திட்டம் | | வெளியாகிய குறைபாடு |
|---|---|---|---|---|
| (i) | விளையாட்டுத்துறை அமைச்சு | மாதெனிய மஹா வித்தியாலய விளையாட்டு மைதானத்தை நிர்மாணித்தல் நிதியேற்பாடு ரூபா 975,409 | (i) | கூரைக்கு 50X50X5mm கோண இரும்மைப் பயன்படுத்த வேண்டுமாயினும், அவ்வாறு செய்யாது 38X38X5mm இரும்பைப் பயன்படுத்தி அதற்கு ரூபா 31,500 செலவிடப்பட்டிருந்தது. |
| | | | (ii) | பிளின்த் பிளாஸ்டர் இடப்படாது அதன் பொருட்டு ரூபா 5,578 வழங்கப்பட்டிருந்தது. |
| | | | (iii) | சுற்றிவர திண்ணை மற்றும் கழிவுநீர் செல்லும் வடிகானிற்கு வெள்ளைப் பூச்சிடாது அதன் பொருட்டு ரூபா 38,371 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| | | | (iv) | வெளியேறும் வடிகாணிற்கு வெள்ளைப் பூச்சிடப்படவில்லை. |
| | | | (v) | கேபள் ராப்டருக்கு ரூபா 17,147 கூடுதலாகச் செலுத்தப்பட்டிருந்தது. |
| (ii) | விளையாட்டுத் துறை அமைச்சு | நிஸ்ஸங்கமல்ல வித்தியாலயத்தின் விளையாட்டு மைதானத்தை அபிவிருத்தி செய்தல் நிதியேற்பாடு ரூபா 1,764,000 | (i) | ஏறக்குறைய 42 மீட்டர் நீளமான பாதைக்கு 48 மீட்டர் எனக் குறிப்பிடப்பட்டு ரூபா 29,909 கூடுதலாக வழங்கப்பட்டிருந்தது. |
| | | | (ii) | மைதானத்தைச் சுற்றிவர ரூபா 610,500 செலவிலான கொங்கிரீட் கழிவுநீர்ப் பாதை மதிப்பீட்டின் பிரகாரம் மூடப்பட்டிருக்கவில்லை. |
| | | | (iii) | பாதையை நிர்மாணிப்பதற்கு ரூபா 191,775 செலவாகிய போதும், அது மிக பள்ளமாக அமைந்ததால் வாகனப் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | ஓட்டத்திற்கு பயன்படுத்த முடியவில்லை. |
| (iii) | விளையாட்டுத் துறை அமைச்சு | கொஸ்தெல்லென வித்தியாலயத்தின் விளையாட்டு மைதானத்தின் பார்வையாளர் அரங்கை நிர்மாணிப்பதற்கு ரூபா 983,944 நிதியேற்பாடு வழங்கப்பட்டிருந்தது. | (i) | சுவர் ரூபா 57,359 செலவில் நிர்மாணிக்கப்பட்ட போதும், இணைப்பு பொருத்தப்படாததால் வெடிப்புகள் ஏற்பட்டிருந்தன. |
| | | | (ii) | கூரைக்கு 62X62X6mm கோண இரும்பு பொருத்தப்படுவதற்கு ரூபா 70,426 கொடுப்பனவு செய்யப்பட்ட போதும், 50X50X5mm கோண இரும்பே பயன்படுத்தப்பட்டிருந்தது. |
| (iv) | விளையாட்டுத்துறை அமைச்சு | அம்பகமுவ லக்ஸபான மத்திய மஹா வித்தியாலய விளையாட்டு மைதான அபிவிருத்தியும் விளையாட்டு மைதான நிர்மாண வேலை மற்றும் பார்வையாளர் மண்டபம் தொடர்பாக ரூபா 1,959,425 நிதியேற்பாடு வழங்கப்பட்டிருந்தது. | (i) | மைதானத்தின் ரூபா 71,625 கொடுப்பனவு செய்யப்பட்டு நிர்மாணிக்கப்பட்ட போதும், இணைப்பு பொருத்தப்படாமையால் வெடிப்புகள் ஏற்பட்டிருந்தன. |
| | | | (ii) | கூரைக்கு 62X62X6mm கோண இரும்பு பொருத்தப்படுவதற்கு ரூபா 94,222 கொடுப்பனவு செய்யப்பட்ட போதும் 50X50X5mm கோண இரும்பே பொருத்தப்பட்டிருந்தது. |
| | | | (iii) | 6"X9"கருங்கற்களை பயன்படுத்தி கருங்கல் சுவர் அமைப்பதற்கு ரூபா 687,168 செலவிடப்பட்டபோதும், அதன்பொருட்டு பயன்படுத்தப்பட்டது. 6"X9" ஐ விட பெரிய மண்ணுடன் கூடிய கற்களே ஆகும். |
| (v) | விளையாட்டுத்துறை அமைச்சு | விக்டோரியா தேசிய வித்தியாலயத்தின் விளையாட்டு மைதானத்தை அபிவிருத்தி செய்யும் வேலை | (i) | 2015 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் வேலை முடிவடைய வேண்டிய போதும் அத்தினத்தன்று 1.4 சதவீத பெறுமதியான வேலையே முடிவடைந்திருந்தது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | உடன்படிக்கை தொகை ரூபா 2,993,738 | (ii) | ஓடு பாதையில் 400 மீட்டர் கொங்கிரீட் வடிகான் அமைக்க வேண்டுமாயினும், பொறியியலாளரின் அங்கீகாரமின்றி 200 மீட்டர் ஓடு பாதையைத் தயாரித்து அதனைச் சுற்றிவர வடிகான் முறைமை நிர்மாணிக்கப்பட்டவாறிருந்தது. |
| (vi) | விளையாட்டுத் துறை அமைச்சு | ஹங்குரங்கெத்த தியதிலக மத்தியமஹா வித்தியாலய விளையாட்டு மைதானத்தை நிர்மாணித்தல் உடன்படிக்கை தொகை ரூபா 3,795,750 | | 2015 திசெம்பர் 20 ஆந் திகதியளவில் நிர்மாண வேலை முடிவடைய வேண்டுமாயினும், 2016 பெப்ரவரி 29 ஆந் திகதியவிலும் வேலை முடிவடையவில்லை.<br><br>கொங்கிரீட்டின் உறுதிப்பாட்டை ஆய்வுகூடத்தில் பரிசீலிக்காது 20 மீட்டருக்கு ரூபா 695,890 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. மைதானத்தைச் சுற்றிவர அமைந்த கொங்கிரீட் தூண்கள் நலிவான நியமத்துடனானவையாக இருந்ததுடன், அவற்றில் பல 2016 பெப்ரவரி 29 ஆந் திகதியளவில் உடைந்து போயிருந்தன. |
| (vii) | வீடமைப்பு மற்றும் சமூர்த்தி அமைச்சு | அம்பகமுவ விமலசுரேந்திரகம பொது மயானத்தைச் சுற்றிவர வேலி அமைத்தல் நிதியேற்பாடு 490,000 | | நியமத்திற்கு ஒவ்வாத கொங்கிரீட் தூண்களும் முற்கம்பினளும் பயன்படுத்தப்பட்டு வேலி அமைக்கப்பட்டபோதும், அதன் பொருட்டு மதிப்பிடப்பட்ட ரூபா 309,869 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| (viii) | வீடமைப்பு மற்றும் சமூர்த்தி அமைச்சு | மஸ்கெலியா அர்ச்.ஜோசப் தமிழ் வித்தியாலயத்தில் 20’X30’ கட்டிடத்தை அபிவிருத்தி செய்தல் நிதியேற்பாடு ரூபா 990,000 | (i) | கூரையில் 62X62X6mm கோண குரும்பைப் பயன்படுத்தி இரும்பு அலங்காரவேலையும் பர்வினும் இடப்பட வேண்டுமாயினும், அதற்கு 40X40X5mm கோண இரும்பே பயன்படுத்தப்பட்டதால் மதிப்பிடப்பட்டவாறு வேலை நிறைவேற்றப்படாது மதிப்பிடப்பட்ட பெறுமதியிலும் 50 சதவீதம் குறைத்து ரூபா 197,651 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| | | | (ii) கூரையில் இடப்பட்ட எஸ்பெஸ்டோஸ் ஷீட் கூரைக்குப் போதியதாக அமையாததுடன், மதிப்பீட்டின்படி Close Fitting வகையிலான ரிஜின், பயன்படுத்தப்படாததுடன், அதற்கென ரூபா 11,055 வழங்கப்பட்டுமிருந்தது.<br><br>(iii) முறையாகப் பொருத்தப்படாத கதவு உடைந்திருந்தபோதும், அதற்கு ரூபா 28,758 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.<br><br>(iv) கட்டிடத்தைச் சுற்றிவர 32.5 மீட்டர் தின்னை மற்றும் வடிகாண் அமைக்கப்பட்டு ரூபா 85,443 செலவழிக்கப்பட்டிருந்த போதும் கட்டிடத்தைச் சுற்றிவர அது முற்றாக நிர்மாணிக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ix) | வீடமைப்பு மற்றும் சமூர்த்தி அமைச்சு | அம்பகமுவ பிரதேச சபையால் மேற்பார்வை செய்யப்பட்டு 2015 நவெம்பர் 15 ஆந் திகதியளவிலும் நிர்மாண வேலை ஆரம்பிக்கப்படாதிருந்த 4 செயற்திட்டங்கள் நிதியேற்பாடு ரூபா 2,783,331 | தொழில்நுட்ப உத்தியோகத்தரால் வேலை ஆரம்பிக்கப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டு வழங்கப்பட்ட தவறான அறிக்கையின் அடிப்படையில் ரூபா 494,000 முற்பணமாக வழங்கப்பட்டிருந்தது. |
| (x) | -மேற்படி- | பத்தன சனசமூக நிலையத்தை அபிவிருத்தி செய்யும் வேலை உடன்படிக்கை பெறுமதி ரூபா 490,000 | (i) குறித்த வேலை 2015 நவெம்பர் 05 ஆந் திகதி பூர்த்தி செய்யப்பட வேண்டுமாயினும், 2015 நவெம்பர் 24 ஆந் திகதியளவிலும் முடிவடையவில்லை.<br><br>(ii) மதிப்பீட்டின்படி இரும்பினால் அலங்காரலமும் பர்லினும் காப்ப பொருத்தப்பட வேண்டுமாயினும், அவற்றிற்குப் பதிலாக பலகை (முற்றாத) மரம் பயன்படுத்தப்பட்டிருந்தது.<br><br>(iii) நியமத்திற்குப் புறம்பான பிளொக் கற்கள் பயன்படுத்தப்பட்டு ரூபா 105,040 செலவிடப்பட்டிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| (xi) | வீடமைப்பு மற்றும் சமூர்த்தி அமைச்சு | அம்பகமுவ பிரதேச சபைக்குட்பட்ட கிளெபர்ட்டன் பகுதி வீதியை அபிவிருத்தி செய்தல் உடன்படிக்கைப் பெறுமதி ரூபா 1,654,546 | (i) வீதியின் பல பகுதிகள் உடைந்திருந்தன. சில இடங்களில் கொங்கிரீட் குறித்த தடிப்பில் இல்லாதிருந்தது. |
| (xii) | வீடமைப்பு மற்றும் சமூர்த்தி அமைச்சு | ஹங்குரன்கெத்த ஹோப்வத்த மத்திய பகுதிக்கு நீர் வழங்கும் செயற்திட்டம் செயற்திட்டக் கிரயம் ரூபா 198,000 | அரசாங்க செயற்திட்டம் ஒன்றிற்கு P.V.C குழாய்களைப் பாவிக்கும் போது 1000 Type குழாய்களைப் பாவிக்க வேண்டுமாயினும், நீரின் அழுத்தத்தைத் தாங்க முடியாத 600 Type குழாய்களைப் பாவித்து ரூபா 178,200 செலவழிக்கப்பட்டிருந்தது. |
| (xiii) | வீடமைப்பு மற்றும் சமூர்த்தி அமைச்சு | ஹங்குரன்கெத்த பிரதேச செயலகப் பிரிவில் 3 வீதிகளை நிர்மாணித்தல் செயற்திட்டம் மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 1,666,000 | (i) மூன்று வீதிகளது நிர்மாண வேலைகளுக்கும் பயன்படுத்த வேண்டிய 19 மி.மீ உருளைக்கற்களுக்குப் பதிலாக 25.மி.மீ மற்றும் 37 மி.மீ உருளைக் கற்கள் பயன்படுத்தப்பட்டிருந்தன.<br><br>(ii) நிர்மாண வேலையினது நியமத்தைத் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களோ உதவிப் பணிப்பாளர்களோ பரிசீலித்தற்கான சம்பவக் குறிப்புகள் எதுவும் சமர்ப்பிக்கப்படவில்லை. |
| (xiv) | வீடமைப்பு மற்றும் சமூர்த்தி அமைச்சு | ஹங்குரன்கெத்த பிரதேச செயலாளர் பிரிவில் குறுந்துவத்தை கிராமத்தின் மத்திய பாதையில் இன்டர்லொக் இடும் வேலை செலவு ரூபா 490,000 | 2015 நவெம்பர் 06 ஆந் திகதியளவில் பதிக்கப்பட்டிருந்த உருளைக் கற்களின் நியமத்தைப் பரிசீலிப்பதற்கு அவை ஆய்வுகூடத்திற்கு அனுப்பப்பட்டிருக்க வில்லை. 2015 நவெம்பர் 09 ஆந் திகதிய கணக்காய்வுச் சந்தர்ப்பத்தின்போது பெறப்பட்டுப் பரிசீலிக்கப்பட்ட உருளைக் கற்களின் சக்தி 10.6 $N/mm^2$ மாத்திரமே என்பதால் நிர்மாண வேலையின் நியமம் எதிர்பார்த்த மட்டத்தில் அமையவில்லை. |
| (xv) | வீடமைப்பு மற்றும் சமூர்த்தி அமைச்சு | ஹங்குரன்கெத்த பிரதேச செயலகப் பிரிவில் உள்ள 3 வீதிகளில் இன்டர்லொக் கற்களைப் பதித்தல் செலவு ரூபா 1,960,000 | இன்டர்லொக் கற்களின் நியமம் ஆய்வுகூட அறிக்கை மூலம் உறுதிசெய்யப்படுவதற்கு முன்னரே கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. |

| | | | | |
|---|---|---|---|---|
| (xvi) | வீடமைப்பு மற்றும் சமூர்த்தி அமைச்சு | ஹங்குரன்கெத்த சமூதாய நீர்ச் செயற்திட்டத்தின் நீரைக் களஞ்சியப்படுத்தும் தாங்கிக்குப் பாதுகாப்பு அரண் அமைக்கும் வேலை. செலவு ரூபா 690,404 | (i) | நியமத்திற்கு ஒவ்வாத முற்கம்பி பயன்படுத்தப்பட்டிருந்ததுடன், அதற்கு ரூபா 485,851 செலவிடப்பட்டிருந்தது. |
| | | | (ii) | தூண்களில் 6 மி.மீ கம்பி 04 பதிக்கப்படுவதற்குப் பதிலாக ஒரு கம்பி மாத்திரமே பதிக்கப்பட்டிருந்தது. |
| | | | (iii) | பெயர்ப் பலகைகக்கு ரூபா 6,000 கொடுப்பனவு செய்யப்பட்டபோதும், பெயர்ப்பலகை பொருத்தப்பட்டிருக்கவில்லை. |
| (xvii) | வீடமைப்பு மற்றும் சமூர்த்தி அமைச்சு | ஹங்குரன்கெத்த அம்பேவெல பலநோக்குக் கட்டிட நிர்மாண வேலை மதிப்பிடப்பட்ட பெறுமதி ரூபா 980,000 | (i) | கட்டிடத்தின் கூரை குறித்த நியமத்தில் அமையாதபோதும், அதற்கு ரூபா 195,720 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| | | | (ii) | கதவுகள் பலா மரதயால் அமையவேண்டுமாயினும், வேறுவலகைகள் பயன்படுத்தப்பட்டுக் கதவுகள் தயாரிக்கப்பட்டிருந்தன. |
| | | | (iii) | கீழ் வீதியில் கதவுகள் பூட்டிடப்பட்டு 4 அங்குலப் பிணைச்சல் போடப்பட வேண்டியபோதும், 3 அங்குலப் பினைச்சல் இடப்பட்டு ரூபா 65,897 செலவிடப்பட்டிருந்தது. |
| (xviii) | வீடமைப்பு மற்றும் சமூர்த்தி அமைச்சு | அம்பகமுவ பிரதேச செயலகத்தால் அமுலாக்கப்பட்ட தெஹிகஸ்தென்ன அம்பதலாவ (மல்லிகா) சனசமூக நிலையத்தைப் புனரமைக்கும் ஒப்பந்தம் பெறுமதி ரூபா 490,000 | (i) | கட்டிடத்தின் கதவு மற்றும் ஓடுகளைத் தாங்கி நிற்கும் பலகைகள் என்பன உலர்த்தாத மரப் பலகைகளால் தயாரிக்கப்பட்டிருந்ததால், 2016 மே 05 ஆந் திகதியளவில் அவற்றில் இடை வெளிகள் ஏற்பட்டிருந்தன. |
| | | | (ii) | C1 01 மரப்பலகை மூலம் 04 Flush Panneled கதவுகள் அமைக்கப்பட வேண்டியபோதும், 02 Battle கதவுகள் அமைக்கப்பட்டு ரூபா 107,250 |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| | | | (iii) | கட்டிடத்தைச் சுற்றிவர பலமில்லாத வலைகள் போடப்பட்டு ரூபா 44,486 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| | | | (iv) | கழிவறையை அமைப்பதற்கு ரூபா 90,000 செலவிடப்பட்டபோதும், அதற்கான நிலையொன்று இல்லாமல் பொருத்தப்பட்டிருந்தது. |
| | | | (v) | பின் பகுதி திள்ணை வெடித்திருந்தபோதும், அதற்கு ரூபா 22,382 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| (xix) | வீடமைப்பு மற்றும் சமூர்த்தி அமைச்சு | நுவரெலிய பிரதேச செயலகத்தால் அமுலாக்கப்பட்ட கந்தப்பொலை பார்க்வத்த வித்தியாலத்தைப் புதுப்பிற்கும் செயற்திட்டம் உடன்படிக்கைப் பெறுமதி ரூபா 490,000 | (i) | 2016 மே 26 அன்று உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டபோதும், அதற்கு முன்னரே 2015 மார்ச் 15 அன்று ஒப்பந்தம் ஆரம்பமாகியிருந்தது. |
| | | | (ii) | சுற்றிவர தின்ணை அமைப்பதற்கு ரூபா 165,123 செலவிடப்பட்டபோதும், வெள்ளைப் பூச்சின் பின்னர் நீர் பயன்படுத்தப்பட்டிராததால் வெடிப்புகள் ஏற்பட்டிருந்தன. |
| | | | (iii) | உள்ளேயும் வெளியேயும் மை பூசுவதற்கு முறையே ரூபா 53,667 மற்றும் ரூபா 48,165 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன், அவை மிகவும் நலிவான நிலையில் காணப்பட்டன. |
| (xx) | வீடமைப்பு மற்றும் சமூர்த்தி அமைச்சு | நுவரெலியா பிரதேச செயலகத்தால் அமுலாக்கப்பட்ட நானுஓயா பலநோக்குக் கட்டிட நிர்மாண வேலை மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 1,250,000 | | நிலத்தைக் கொங்கிரீட் இடல், மட்டப்படுத்துதல், யன்னல், கதவுகள் முதலியவற்றைப் பொருத்துதல், மின்சாரம் வழங்குதல் என்பன மதிப்பீட்டின் பிரகாரம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. அதற்கென ரூபா 870,124 கொடுப்பனவு செய்யப்பட்டபோதும், கட்டிடத்தைப் பயன்படுத்த முடியாதிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| (xxi) | வீடமைப்பு மற்றும் சமுர்த்தி அமைச்சு | நுவரெலியா பிரதேச செயலகப் பிரிவில் உள்ள யுலிபீல்ட் மாதர் மற்றும் சிறுவர் சுகாதார சிகிச்சைக் கட்டிட நிர்மாண வேலை மதிப்பிடப்பட்ட பெறுமதி ரூபா 980,000 | (i) கூரையில் இடப்பட்ட அஸ்பெஸ்டொஸ் ஷீட்கள் பல வெடித்திருந்தன. அதற்கு ரூபா 61,465 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| | | | (ii) இரு சீலிங் ஷீட்களுக்கு இடையே பயன்படுத்தப்பட வேண்டிய 2''X2'' பலகைகள் குறித்த பரிமானத்தில் அமையவில்லை. ஸ்குரூ ஆணிகளுக்குப் பதிலாகக் கம்பி ஆணிகள் பயன்படுத்தப்பட்டிருந்தன. அதற்கு ரூபா 49,089 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| | | | (iii) மதிப்பீட்டின் படி நிலத்தில் களிமண் வகையிலான நில ஓடுகளைப் பதிப்பதற்கென ரூபா 129,180 கொடுப்பனவு செய்யப்பட வேண்டுமாயினும், அதற்கென கிளொஸ் பினிஷ் ஓடுகள் பயன்படுத்தப்பட்டிருந்தன. |
| | | | (iv) கேபள் ராப்டருக்குப் பதிலாக சீ பர்லின் 02 ஒட்டப்பட்டு கூரை அழைக்கப்பட்டதால், அது தரமற்றிருந்தது. |
| | | | (v) பிளொக் கற்களுக்கு ரூபா 116,817 செலவழித்து SLS நியமங்களுக்குப் புறம்பாக பிளொக் கற்கள் பயன்படுத்தப்பட்டமையால் சுவர் ஆங்காங்கே உடைந்திருந்தன. |
| | | | (vi) 9''X9'' இடை வெளியில் மழை நீர் வடிந்து செல்லும் குழாய் அமைப்பதற்கு இரும்புப் பிணைச்சல் பொருத்தப்பட வேண்டுமயினும், ஏறக்குறைய 24 இடை வெளியில் அந்த ஆணிகள் பொருத்தப்பட்டு ரூபா 23,981 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| | | | (vii) பொருத்தப்பட்டிருந்த மின் மானியில் 2 மின் வரிசைகளே இருந்ததுடன், பிரதான பலகையில் டிப் சுவிட்ச் பொருத்தப்படாமலேயே ரூபா 9,287 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| (xxii) | வீடமைப்பு மற்றும் சமூர்த்தி அமைச்சு | நுவரெலியா பிரதேச சபை அமுலாக்கிய ஹாத்தியபுர சனசமூக நிலைய அபிவிருத்திச் செயற்திட்டம் மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 980,000 | (i) உட்கூரை “2X2” பலகைகள் மதிப்பீட்டின்படி பயன்படுத்தப்பட வில்லை. |
| | | | (ii) உட்கூரை ஷீட்களுக்கிடையே பயன்படுத்த வேண்டிய பீடின் பயன்படுத்தப்படாது பொடி பயன்படுத்தப்பட்டிருந்தது. |
| | | | (iii) நிலத்திற்களாக களி மண் வகை நில ஓடு பதிக்கப்பட வேண்டுமாயினும், அதன் பொருட்டு கிளொஸ் பினிஷ் நில ஓடு பயன்படுத்தப்பட்டிருந்தது. |
| | | | (iv) சுற்றிவர வெள்ளைப பூச்சின் பின்னர் நீரைப் பயன்படுத்தாமையால் உடைவுகள் ஏற்பட்டிருந்தன. |
| (xxiii) | சிறுவர் அலுவல்களுக்கான அரசாங்க அமைச்சு | மதிய பாதுகாப்பு நிலையத்தை நிர்மாணித்தல் உடன்படிக்கைத் தொகை 2014 - ரூபா 6,933,977 2015 - ரூபா 7,967,090 | 2014 ஆம் ஆண்டில் ஒப்பந்தகாரருடன் ஏற்படுத்திய உடன்படிக்கைப்படி 75 நாட்களுக்குள் வேலை முடிவடைய வேண்டுமாயினும், 2015 மார்ச் 15 வரை 90 நாட்கள் மேலும் நீடிப்பு வழங்கப்பட்டிருந்தது. நீடிக்கப்பட்ட காலமும் முடிவடைந்தபோதும், நிர்மாண வேலை ரூபா 3,165,381 பெறுமதி வரையே முடிவடைந்திருந்தது. |
| | | | (ii) ஒப்பந்தத்திற்கான உடன்படிக்கைப் படி, தாமதக் கட்டணம் நாளொன்றிற்கு ஒப்பந்தப் பெறுமதியில் 1/2000 ஆகியபோதும், அது வாரத்திற்கு 1/4000 என உடன்படிக்கைக்குள்ளானதால், நாளாந்த தாமதக் கட்டணம் ரூபா 3,698 குறைவடைந்திருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| | | | (iii) பின் புறத்து திண்ணை வெடிப்புகள் ஏற்பட்டபோதும், அதற்கு ரூபா 22,382 வழங்கப்பட்டிருந்தது. |
| (xxiv) | சமூக வலுவாக்கல் மற்றும் நலன்புரி அமைச்சு | 15,000 கிராமங்களது எழுச்சிக்கான செயற்திட்டம், வீட்டுக்கு வீடு, கிராமத்திற்குக் கிராமம் நிகழ்ச்சித்திட்டம் மற்றும் கிராமிய சமூதாய சுகாதார சேவைகள் நிலையத்தை அபிவிருத்தி செய்யும் நிலையம் என்பவற்றின் கீழ் 03 நிகழ்ச்சித்திட்டங்களின் மூலம் 691 செயற்திட்டங்களைச் செயற்படுத்துதல் நிதியேற்பாடு ரூபா 499.7 மில்லியன் | மீளாய்வாண்டு முடிவில் ஏறக்குறைய 555 செயற்திட்டங்களே முடிவடைந்திருந்தன. ஹங்குரங்கெத்த வலயத்தில் 5 செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்படாததுடன், 20 செயற்திட்டங்களது செயல் முன்னேற்றம் 25 சதவீதத்திற்கும் குறைந்த மட்டத்திலேயே இருந்தது. |
| (xxv) | கந்துரட்ட புதிய கிராம அடிப்படை வசதிகள் மற்றும் சமூதாய அபிவிருத்தி அமைச்சு | 225 செயற்திட்டங்களை உருவாக்குதல். நிதியேற்பாடு ரூபா 101.45 மில்லியன் | 198 செயற்திட்டங்கள் மாத்திரம் முடிவடைந்திருந்தன. அவற்றின் நிதி முன்னேற்றம் 81 சதவீதம் ஆகவிருந்தது. மேலும், 23 செயற்திட்டங்களது செயல் முன்னேற்றம் 50 சதவீதத்திற்கும் குறைவானதே. |
| (xxvi) | சுற்றுலா மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சு | விளையாட்டு மைதான அபிவிருத்தி நடவடிக்கைகள் நிதியேற்பாடு ரூபா 122 மில்லியன் | ஆண்டின் இறுதியளவில் அதில் ரூபா 76.77 மில்லியன் அல்லது வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டில் 63 சதவீதம் செலவழிக்கப்பட்டிருந்தது. இதன் மூலம் 120 விளையாட்டு மைதானங்களை நிர்மாணிக்க எதிர்பார்த்த போதும், அதில் 94 விளையாட்டு மைதானங்களே முடிவடைந்திருந்தன. மாவட்டச் செயலகத்தால் மேற்பார்வையிடப்பட்ட வலப்பனே பிரிவில் 04 விளையாட்டு மைதானங்களை நிர்மாணிப்பதற்கான ரூபா 21.24 மில்லியன் ஒப்பந்தத்தில் ஆண்டின் இறுதியில் 2.7 சதவீத நிதிசார் பெறுமதி வாய்ந்த வேலைகள் மாத்திரமே முடிவடைந்திருந்தன. |
| (xvii) | இடர் முகாமைத்துவ அமைச்சு | 09 செயற்திட்டங்களை அமுலாக்குதல் நிதியேற்பாடு ரூபா 7.88 மில்லியன் | வழங்கப்பட்ட நிதியேற்பாட்டில் 40 சதவீதத்தைக் குறிக்கும் ரூபா 3.14 மில்லியன் நிதியேற்பாடு மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தது. திக்ஓயா கால்வாய் புனரமைப்பிற்கு 2014 ஆம் |

| | | | |
|---|---|---|---|
| | | | ஆண்டில் தயாரித்த செயற்திட்ட அறிக்கையின்படி 2015 ஏப்ரல் 01 ஆந் திகதியன்று ரூபா 5.91 மில்லியன் நிதியேற்பாடு செய்யப்பட்டபோதும், அத்துமீறிய குடியிருப்புகளை அகற்றாது செயற்திட்டத்தை நிறைவேற்றியதால் வெற்றிகரமான விளைவுகள் பெறப்பட முடியாதுள்ளதென அறிவித்து 2015 ஜுன் 10 ஆந் திகதிய NE/25/DMC/44 ஆம் இலக்கக் கடிதத்தின் மூலம் அதற்கென வழங்கப்பட்ட மொத்த நிதியேற்பாடும் திருப்பி அனுப்பப்பட்டிருந்தது. அதன் பின்னர், இது தொடர்பான தொடர் நடவடிக்கைகள் எதுவும் இடம் பெறவில்லை. |
| (xxviii) | விவசாயத் திணைக்களம் | விதை கிழங்கு உற்பத்தி மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டம் நிதியேற்பாடு ரூபா 16 மில்லியன் | 2015 ஆம் ஆண்டில் அமுலாக்குவதற்காக 2015 பெப்ரவரி 24 ஆந் திகதியன்று ரூபா 16 மில்லியன் நிதியேற்பாடு வழங்கப்பட்டிருந்தது. எனினும், அது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்வது மாவட்டச் செயலகத்தின் பொறுப்பு அல்ல எனக் குறிப்பிட்டு ரூபா 12.35 மில்லியன் நிதியேற்பாடு மீண்டும் விவசாயத் திணைக்களத்திடம் 2015 ஜுன் 24 ஆந் திகதியன்று ஒப்படைக்கப்பட்டிருந்தது. |
| (xxix) | உள்நாட்டலுவல்கள் அமைச்சு | 2014 ஆம் ஆண்டின் தொடர் வேலைகள் 363 நிறைவேற்றப்படல் நிதியேற்பாடு ரூபா 156.06 மில்லியன் | 2014 ஆம் ஆண்டின் 363 தொடர் வேலைகளை நிறைவு செய்வதற்கு ரூபா 223.52 நிதியேற்பாடு தேவைப்பட்டது. ஆயினும், அதற்கென உள்நாட்டலுவல்கள் அமைச்சு ரூபா 156.06 மில்லியன் நிதியேற்பாட்டை 2015 ஆம் ஆண்டில் வழங்கியிருந்தது. 2015 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் வேலை முடிவடைந்திருந்த செயற்திட்டங்களுக்கு ரூபா 70.97 மில்லியன் மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது. அதற்கமைய, மேலும் ரூபா 152.54 மில்லியன் தேவையான 313 செயற்திட்டங்களை பூர்த்தி செய்ய முடியாதிருந்தன. |
| (xxx) | பொருளாதார அபிவிருத்தி அமைச்சு | 2015 ஆம் ஆண்டளவில் முடிவடையாத 13 செயற்திட்டங்களுக்காகச் செலவிடப்பட்ட தொகை ரூபா | 2014 ஆம் ஆண்டில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் நுவரெலியா மாவட்டத்தில் 2759 செயற்திட்டங்களைத் செயற்படுத்த 313 செயற்திட்டங்கள் |

| | | | |
|---|---|---|---|
| | | 8.47 மில்லியன் | முடியடையாத அல்லது 2015 தொடர் வேலையாக்கப்படாத அவை பூர்த்தி செய்யப்படாமையால் பொதுமக்கள் பயன் எதனையும் பெறவில்லை. தெரிவுச் கணக்காய்வுச் செவ்வைகளுக்குள்ளான அவ்வாறான 13 செயற்திட்டங்களுக்கு ரூபா 8.46 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. எனினும், அச்செயற்திட்டங்கள் முடிவடையாததால் செலவிடப்பட்ட தொகை பயனற்றதாயிற்று. |
| (xxxi) | உள்நாட்டலுவல்கள் அமைச்சு | பொறுப்புகளைத் தீர்த்து வைத்தல் ரூபா 260.15 மில்லியன் | மாவட்டச் செயலகத்தாலும் பிரதேச செயலகங்களாலும் அமுலாக்கப்பட்ட செயற்திட்டங்களுக்கு 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கொடுப்பனவு செய்யப்பட வேண்டியிருந்த விலைப்பட்டியல் ரூபா 260.15 மில்லியனாகும். இதனைத் தீர்த்து வைப்பதற்கு உள்நாட்டலுவல்கள் அமைச்சிடமிருந்து பணம் பெறப்பட்டிருந்தது. எனினும், 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கையிலிருந்த விலைப் பட்டியல்களில் ரூபா 209.89 மில்லியனுக்கான விலைப்பட்டியல் மாத்திரமே தீர்த்து வைக்கப்பட்டிருந்தது. அதற்கமைய, கையிலுள்ள விலைப்பட்டியல்கள் கணிப்பிடப்படாது பணத்தைப் பெற்றமையால் ரூபா 50.26 மில்லியன் மிகையாக இருந்தது. |

(ஆ) அரசாங்கத்தின் 100 நாள் விசேட அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தோடு இணைந்து அமுலாக்கப்பட்ட கிராமங்களைக் கட்டியெழுப்பும் நிகழ்ச்சித்திட்டம் - 2015 என்பதன் கீழ் வலப்பனே பிரதேச செயலகத்திற்கு 2015 ஏப்ரல் 02 ஆந் திகதியன்று அங்கீகரிக்கப்பட்டிருந்த 151 செயற்திட்டங்களை அமுலாக்குவதற்காக 2015 மே 15 ஆந் திகதியன்று ரூபா 123.75 மில்லியன் நிதியேற்பாடு விடுவிக்கப்பட்டிருந்தது. அதில் ஒரு செயற்திட்டத்திற்கு ரூபா 500,000 நிதியேற்பாடு கிடைத்திருந்த போதும், அச்செயற்திட்டம் அமுலாக்கப்படவில்லை. 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 16 செயற்திட்டங்களது செயல் முன்னேற்றம் 26 முதல் 50 சதவீதமாக அமைந்திருந்ததுடன், மேலும் 05 செயற்திட்டங்களது செயல் முன்னேற்றம் அத்திகதியளவில் உள்ளவாறு 51 முதல் 75 சதவீதம் வரையிலானது என அவதானிக்கப்பட்டது.

(இ) ஓய்வூதியத் திணைக்களத்திடமிருந்து மீளாய்வாண்டின்போது ரூபா 208.62 மில்லியன் கிடைக்கப்பெற்றபோதும், அதில் ரூபா 130.67 மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கமைய, கிடைக்கப் பெற்ற 37 சதவீதத்தைக் குறிக்கும் ரூபா 77.95 மில்லியன் நிதியானது ஆண்டின் இறுதியிலும் பயன்படுத்தப்படாதிருந்தது. எதிர்பார்க்கும் நிதியை வைத்துக் கொண்டு எஞ்சியதை மீளளிக்குமாறு ஓய்வூதியப் பணிப்பாளர் தனது 2015 திசெம்பர் 02 ஆந் திகதிய வீ/வெ/சி/17 ஆம் இலக்கக் கடிதத்தின் மூலம்

கேட்டுக்கொண்டபோதும், இந்நிதியைத் திருப்பி அனுப்புவதற்கு ஆண்டின் இறுதியளவிலும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4 கட்டு நிதிக் கணக்கு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2012 ஆம் ஆண்டின்போது வெளி ஒப்பந்தகாரர் ஒருவருக்கு முற்பணம் வழங்கப்பட்டிருந்தது. 2016 ஏப்ரல் 16 ஆந் திகதியளவிலும் அம் முற்பணத்தில் ரூபா 1.08 மில்லியனை அறவிட நடவடிக்கை எடுக்காமையால், அரசாங்கப் பணம் வெளி நபரிடம் இருப்பதற்கு மாவட்டச் செயலாளரால் இடமளிக்கப்பட்டிருந்தது.

(ஆ) திறைசேரிப் புத்தகங்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்த்து வைக்கப்படாதிருந்த கட்டுநிதி மீதி ரூபா 223.40 மில்லியன் ஆகும். இம்மீதியானது திறைசேரிக்கு 2016 சனவரி 12 ஆந் திகதியன்று ரூபா 211.26 மில்லியன் மற்றும் 2016 பெப்ரவரி 23 ஆந் திகதியன்று ரூபா 10.44 மில்லியன் என மொத்தமாக ரூபா 221.71 மில்லியன் என தீர்த்து வைக்கப்பட்டிருந்தது. மேலும் தீர்த்து வைக்கப்படாதிருந்த எஞ்சிய ரூபா 619,955 தொகையானது 2016 ஏப்ரல் 15 ஆந் திகதியளவிலும் தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மாவட்டச் செயலகம், வலப்பனே மற்றும் கொத்மலே பிரதேச செயலகங்களால் 04 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட ரூபா 62,000 கூட்டுத்தொகையுடைய இடைக்காலக் கட்டு நிதி தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை. 25 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட ரூபா 390,250 கூட்டுத் தொகையுடைய செயல்நிமித்த கட்டுநிதி வேலை முடிவடைந்து 04 நாட்கள் முதல் 09 மாத தாமதத்துடன் தீர்த்து வைக்கப்பட்டிருந்தன.

### 3.5 பொது வைப்புக் கணக்கு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட (காணி வைப்புகள் நீங்கலாக) ரூபா 8,461,531 கூட்டுத் தொகையுடைய 242 வைப்புகள் சம்பந்தமாக நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) கணக்கில் சுட்டிக்காட்டப்பட்ட பொது வைப்புக் கணக்கு மீதி மற்றும் ஒவ்வொரு பிரதேச செயலகத்தாலும் தயாரிக்கப்பட்டுச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த ஒதுக்கீட்டுக் கணக்குகளது பொது வைப்பு மீதிகளுக்கிடையே ரூபா 3,911,150 கூட்டுத் தொகையுடைய வேறுபாடொன்று நிலவியது.

(இ) ஏனைய அமைச்சுக்களாலும் திணைக்களங்களாலும் 18 சந்தர்ப்பங்களில் பல்வேறு பணிகளுக்கென வழங்கப்பட்ட ரூபா 1,436,365 கூட்டுத் தொகையுடைய நிதி குறித்த வேலைகள் மேற்கொள்ளாமல் வைப்புக் கணக்கில் இடப்பட்டிருந்தது.

### 3.6 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்றுக்கள்

விடய இலக்கம் 26001 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக்கூற்று சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுத் தெரிவுக் கணக்காய்வு செவ்வைகளின்போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக் கூற்றின் பிரகாரம், அத்தினத்தில் உள்ளவாறு அறவீடு நிலுவையாக இருந்த மீதிகளது கூட்டுத் தொகை ரூபா 1,033,996 ஆகும். அந்நிலுவை மீதிகள் 06 மாதங்கள் தொடக்கம் 09 ஆண்டுகளாக இருந்து வருபவையாயினும், அம் மீதிகளை அறவிடுவதற்கான பின் தொடர் நடவடிக்கைகள் நலிவுற்ற நிலையில் இருந்தன.

(ஆ) 2008 திசெம்பர் 31 ஆந் திகதிய 30/2008 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை மற்றும் 2014 சனவரி 01 ஆந் திகதிய 1/2014 ஆம் இலக்க தேசிய வரவு, செலவுத்திட்டச் சுற்றறிக்கை என்பவற்றிற்கு முரணாக உத்தியோகத்தர் ஒருவருக்கு ரூபா 316,700 இடர் கடனாக வழங்கப்பட்டிருந்தது.

(இ) முற்பணம் தொடர்பான இணக்கக் கூற்று மற்றும் வலப்பனே பிரதேச செயலகத் தனிப்பட்ட மீதிகள் என்பவற்றுக்கிடையே ரூபா 27,414 வேறுபாடு நிலவியது.

## 3.7 சொத்து முகாமைத்துவம்

மாவட்டச் செயலகத்தின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுத் தெரிவுச் செவ்வைகளின்போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) பயன்படுத்தப்படாததும் குறைவாகப் பயன்படுத்தப்படுவதுமான சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) கீழே வகைப்படுத்தப்பட்டவாறு, சில சொத்துக்கள் பயன்படுத்தப்படாது அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்டவாறிருந்தமை கணக்காய்வுத் தெரிவுச் செவ்வைகளின்போது அவதானிக்கப்பட்டன.

| சொத்து வகை | கூறுகளின் எண்ணிக்கை | பயன்படுத்தப்படாது அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட காலம் |
|---|---|---|
| மோட்டார் வாகனங்கள் | 29 | 02 ஆண்டுகள் |
| ஏனைய சொத்துக்கள் | 01 | 01 ஆண்டு |

(ii) அம்பகமுவ பிரதேச செயலகத்தின் பழைய கருத்தரங்கு மண்டபக் கட்டிடம் தேர்தல்கள் திணைக்களத்தின் கட்டளைக்கமைய 2015 சனவரி 09 ஆந் திகதியன்று முத்திரையிடப்பட்டிருந்ததுடன் அத்திகதி முதல் 2016 பெப்ரவரி 16 ஆந் திகதியளவிலும் அக்கட்டிடம் பயன்படுத்தப்படாதிருந்தது.

(iii) அம்பகமுவ பிரதேச செயலகத்தால் ரூபா 6,372,291 பெறுமதியான 64 வகைப் பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டு 2016 ஏப்ரல் 27 ஆந் திகதியளவில் 14 மாதங்களுக்கு மேற்பட்டிருந்த போதும், அப்பொருட்கள் விநியோகிக்கப்படாது களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தன.

(iv) 02 பிரதேச செயலகங்கள் ரூபா 3,152,347 கூட்டுத்தொகைப் பெறுமதியுடைய 23 வகைப் பொருட்களைக் கொள்வனவு செய்து 2016 மார்ச் 29 ஆந் திகதியளவில் 14 மாதங்கள் கடந்திருந்தபோதும் அப்பொருட்கள் விநியோகிக்கப்படாமல் களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தன.

(v) பிரதேச செயலகம் ஒன்றின் விசேட செயற்திட்டம் (சீவனோபாய அபிவிருத்தி) ஒன்றின் கீழ் 2014 ஆம் ஆண்டின்போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 292,500 பெறுமதியான 26 தையல் இயந்திரங்கலும் ரூபா 675,974 பெறுமதியான 21 ஸ்பிரே இயந்திரங்களும் 2016 ஏப்ரல் 28 ஆந் திகதியளவிலும் குறித்த நலன்பெறுநர்களிடையே பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கவில்லை.

(vi) பன்முகப்படுத்தப்பட்ட முன்மொழிதலின் கீழ் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கிடையே விநியோகிக்கப்படுவதற்காக வழங்கப்பட்ட 20 கூரைத் தகடுகள் மற்றும் ஏனைய 60 கூரைத் தகடுகள் என்பன கொத்மலே பிரதேச செயலகக் களஞ்சியத்தில் பயனற்றிருந்தன.

(vii) மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகங்கள் ஏனைய அமைச்சுக்களது நிதியேற்பாடுகளின் நிர்வாகச் செலவினத்தின் மூலம் பெற்றிருந்த ரூபா 5,147,079 பெறுமதியான மூலதனச் சொத்துக்கள் நடைமுறை அல்லாத சொத்து அசைவு அறிக்கையில் காட்டப்படவில்லை.

(ஆ) ஏனைய நிறுவனங்களது சொத்துக்களை முறையற்றவாறு பயன்படுத்துதல்

ஏனைய நிறுவனங்களது சில சொத்துக்கள் முறையான அங்கீகாரம் இல்லாது மாவட்டச் செயலகத்தால் பயன்படுத்தப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையின்போது அவதானிக்கப்பட்டது.

| **சொத்தின் வகை** | **சொத்துக்களுக்கு உரித்துள்ள நிறுவனம்** | **பெறுமதி** | **காலப்பகுதி** |
|---|---|---|---|
| | | **ரூபா. மில்லியன்** | |
| காணி | மஹாவலி அபிவிருத்தி அதிகாரசபை | - | 25 ஆண்டுகள் |
| மோட்டார் வாகனங்கள் | கமத்தொழில் அமைச்சு | 02 | 12 ஆண்டுகள் |

## 3.8 தீர்த்து வைக்கப்படாத பொறுப்புகள்

மாவட்டச் செயலகத்தால் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்த்து வைக்கப்படாதிருந்த ஓராண்டிற்கும் குறைவான பொறுப்புகள் ரூபா 3,345,384 ஆகும்.

## 3.9 இணக்கமின்மை

### சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | | | பெறுமதி | இணங்காமை |
|---|---|---|---|---|
| | | | ரூபா | |
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் நிதிப் பிரமாணங்கள் | | | |
| | (i) | நிதிப்பிரமாணம் 115(3)(அ) | 2,423,913 | மாவட்டச் செயலகம் மற்றும் நுவரெலியா பிரதேச செயலகத்தால் 07 சந்தர்ப்பங்களில் அமைச்சின் செயலாளரது அங்கீகாரம் இல்லாது முன்னைய ஆண்டிற்கான பொறுப்பு தீர்த்து வைக்கப்பட்டிருந்தது. |
| | (ii) | நிதிப்பிரமாணம் 137 | 5,971,165 | மாவட்டச் செயலகமும் 3 பிரதேச செயலகங்களும் செலவினத்தைச் சான்றுறுதிப்படுத்தாது 37 சந்தர்ப்பங்களில் கொடுப்பனவுகளை மேற்கொண்டிருந்தன. |
| | (iii) | நிதிப்பிரமாணம் 139(1) | 122,776,236 | திவிநெகும அபிவிருத்தித் திணைக்களத்தின் நுவரெலியா மாவட்டச் செயலகத்தால் செலவிடப்பட்ட ரூபா 122,776,236 பெறுமதியான கொடுப்பனவு உறுதிச் சான்றுகள் குறித்த அதிகாரிகளால் சான்றுறுதிப்படுத்தப்படாது கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தன. |
| | (iv) | நிதிப்பிரமாணம் 257 | 68,572,519 | திவிநெகும அபிவிருத்தித் திணைக்களத்தின் நுவரெலியா மாவட்ட அலுவலகத்தில் கொடுப்பனவு உறுதிச் சான்றுகள் சான்றுறுதிப்படுத்தாது கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. |
| | (v) | நிதிப்பிரரமாணம் 262(2) | 3,851,418 | மாவட்டச் செயலகம் மற்றும் வலப்பனே பிரதேச செயலகத்தால் 23 சந்தர்ப்பங்களில் கொடுப்பனவு செய்யப்பட்ட உறுதிச்சீட்டுக்களிலும் அவற்றை உறுதி செய்யும் ஆவணங்களிலும் “கொடுப்பனவு செய்யப்பட்டது”எனும் முத்திரை பொறிக்கப்பட்டிருக்க வேண்டுமாயினும், குறித்த உறுதிச் சான்றுகளில் கொடுப்பனவு செய்யப்பட்டதற்கான முத்திரை பொறிக்கப்பட்டிருக்க வில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | (vi) நிதிப்பிரமாணம் 262(3) | 16,491,155 | திவிநெகும அபிவிருத்தித் திணைக்களத்தின் நுவரெலியா மாவட்ட அலவலகத்தின் கொடுப்பனவு உறுதிச் சான்றுகள் தயாரிக்கப்பட்டமைக்கான சிறு கையெழுத்திட்டிருக்கப்படவில்லை. |
| (ஆ) | அரசாங்க நிதிச் சுற்றறிக்கை | | |
| | 2009 செப்டம்பர் 18 ஆந் திகதிய PT/437 ஆம் இலக்கச் சுற்றறிக்கை | - | இரு பிரதேச செயலகங்களுக்குரிய வாகனங்களுக்கு அனுமதிப்பத்திரம் பெறப்பட்டிருக்காததுடன், வாகனங்களுக்கு காப்புறுதி மேவுகைகள் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்க வில்லை. |
| (இ) | ஏனைய சுற்றறிக்கைக் கடிதங்கள் | | |
| | (i) 2015 ஏப்ரல் 10 ஆந் திகதிய சிறுவர் அலுவல்கள் அரசாங்க அமைச்சின் செயலாளரது கடிதம் | 776,940 | கர்ப்பிணித் தாய்மார்களுக்கு ரூபா 2,000 பெறுமதியான போசனைப் பைகள் வீதம் வழங்கப்பட வேண்டுமாயினும், அப்பெறுமதிக்குக் குறைவான போசனைப் பைகள் 3 பிரசே செயலகங்களால் வழங்கப்பட்டு அதற்கமைய ரூபா 776,940 குறைவான போசனைப் பைகள் வழங்கப்பட்டிருந்தன. |
| | (ii) 2015 ஏப்ரல் 24 ஆந் திகதிய PL/7/3/மோட்டர் சைக்கிள் எனும் இலக்கமுடைய பொது நிர்வாகம் மாகாண சபைகள் மற்றும் ஜனநாயக நிர்வாகம் தொடர்பான அமைச்சினது மேலதிக செயலாளரின் கடிதம் | 584,760 | அரசாங்க ஊழியராக அல்லது பிரதேச சபை அங்கத்தவர் ஒருவராக அரசாங்கத்தால் வழங்கப்படும் மோட்டார் சைக்கிள்கள் 2 வீதம் 3 உத்தியோகத்தர்கள் அவற்பைப் பெற்றிருந்தனர். எனினும், 3 மோட்டார் சைக்கிள்களது பெறுமதியை அறவிடுவதற்கு அல்லது சட்டபூர்வ நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3.10 உள்நாட்டு நிதியளிப்பின் மூலம் செயற்திட்டத்தை அமுலாக்குதல்

செயற்திட்டத்தை ஆரம்பிக்காது கைவிடுதல், செயற்திட்டத்தை நிறைவேற்றாது கைவிடுதல் மற்றும் செயற்திட்டத் தாமதம் தொடர்பான கணக்காய்வுத் தெரிவுச் செவ்வைகளின்போது வெளியாகிய சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

**(அ) செயற்திட்டத்தை ஆரம்பிக்காது கைவிடுதல்**

மாவட்டச் செயலகத்தால் பின்வரும் செயற்திட்டங்களை ஆரம்பிக்கவில்லை.

| | செயற்திட்டம் | மதிப்பீட்டுக் கிரயம் | செயற்திட்டத்தை ஆரம்பிக்காமைக்கான காரணங்கள், சுருக்கமாக |
|---|---|---|---|
| (i) | பீலிஹத்தர வாவியின் பாதையில் பக்கச் சுவர்களைத் தயாரித்தல் | 635,115 | பிரதேச வாசிகளது எதிர்ப்பு |
| (ii) | சமனலகம தொடக்கம் MR நகரம் வரையான இடைப் பாதையில் பக்கச் சுவர்களை நிர்மாணித்தல் | - | தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் (NBRO) நிலைப் பரிசீலனைகளை மேற்கொண்டு மேற்படி செயற்திட்டம் பொருத்தமற்றது என சிபாரிசு செய்தமை |
| (iii) | இடமலன்த போகஸ்பிட்டிய பால நிர்மாண வேலை | 665,000 | நிதியாண்டிற்குள் ஒப்பந்தகாரர் வேலையை முடிவுறுத்தாமல் இருந்தமையால் குறித்த உடன்படிக்கையில் ஈடுபட்ட சங்கத்தை கறுப்பு பட்டியலுக்கு உட்படுத்தப்பட்டிருந்தது. |
| (iv) | பல்லேபிட்டிய வீதியின் எஞ்சிய பகுதியை பாலம் வரை அபிவிருத்தி செய்தல் | 503,064 | -மேற்படி- |
| (v) | போதி எலவிலிருந்து கீழ்நோக்கி வரும் வயல்வெளியை தொடர்புபடுத்தும் பல்லேபாவெல கமத்தொழில் பாதை | 627,356 | -மேற்படி- |
| (vi) | உடதென்ன மதுராவே வத்தை வீதியை அபிவிருத்தி செய்தல் - II | 300,785 | -மேற்படி- |
| (vii) | மாலிகா தென்ன கொளனி வீதியில் கொங்கிரீட் இடல் - II | 657,538 | -மேற்படி- |
| (viii) | குளக்கட்டு முதல் மாஎல வரையான பாதையில் பக்கச் சுவர்களை நிர்மாணித்து அபிவிருத்தி செய்தல் | 751,909 | -மேற்படி- |
| (ix) | மெத கம்மெத்த கமத்தொழில் பாதையை | 1,250,719 | பிரதேச சபை இச்செயற்திட்டத்தை நிறைவேற்றியிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| | அபிவிருத்தி செய்தல் | | |
| (x) | கெட்டயாபத்தன உடகம சனசமூக நிலைய அண்மை தொடக்கம் கெட்டயாபத்தன பாடசாலை வரையான பாதையை அபிவிருத்தி செய்தல் | 1,230,884 | பிரதேச சபை இச் செயற்திட்டத்தை நிறைவேற்றியிருந்தது. |
| (xi) | மெரிகொல்ட் புதிய சனசமூக நிலையத்தை நிர்மாணித்தல் | 1,259,101 | தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தின் நிலைமை அறிக்கை கிடைக்காமை |
| (xii) | போமெல்லகொடை நாபொக்கை வீதி அபிவிருத்தி | மதிப்பீடு செய்யப்பட வில்லை | நிதியேற்பாட்டுப் பற்றாக்குறை |
| (xiii) | பங்களா கொளனியின் மேற்புறக் கமத்தொழில் வீதி வைத்தியசாலை வீதியை அபிவிருத்தி செய்தல் | 861,231 | பிரதேச சபை இச்செயற்திட்டத்தை நிறைவேற்றியிருந்தது. |
| (xiv) | முல்ஓயா சந்தி தொடக்கம் றுக்வுட் வீதியில் அபிவிருத்தி செய்யப்படாத பிரிவை அபிவிருத்தி செய்தல் | 1,275,002 | நிதியாண்டில் ஒப்பந்தகாரர் வேலையை நிறைவேற்றியிராததால் குறித்த உடன்படிக்கையில் ஈடுபட்ட சங்கத்தை கறுப்பு பட்டியலில் உட்படுத்தப்பட்டுள்ளது. |
| (xv) | ஹோப்வத்த புதிய வீடமைப்புத் திட்டத்திற்குச் செல்லும் வீதியை அபிவிருத்தி செய்தல் (மேற் பகுதி இலக்கம் 09) | 628,923 | -மேற்படி- |
| (xvi) | பெரிய ரஹன்வத்தைக்குச் செல்லும் வீதியை அபிவிருத்தி செய்தல் | 600,000 | உடன்படிக்கை செய்து கொண்ட சங்கம் செயற்திட்டத்தை ஆரம்பிக்கவில்லை |
| (xvii) | பம்பரகெலே தொழிற்சாலைப் பகுதியின் கோவில் படிகளை அபிருத்தி செய்தல் | 400,000 | உடன்படிக்கை செய்து கொண்ட சங்கம் செயற்திட்டத்தை ஆரம்பிக்கவில்லை. |
| (xviii) | ஜயலங்கா வடிகான் முறைமையை நிர்மாணித்தல் | 1,000,000 | உடன்படிக்கை செய்துகொண்ட சங்கம் செயற்திட்டத்தை ஆரம்பிக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (xix) | இல்டன் ஹோல்வத்த வீதியை அபிவிருத்தி செய்தல் | 1,000,000 | உடன்படிக்கை செய்து கொண்ட சங்கம் செயற்திட்டத்தை ஆரம்பிக்கவில்லை |
| (xx) | கன்தெஉல வீதியை அபிவிருத்தி செய்தல் | 1,000,000 | உடன்படிக்கை செய்து கொண்ட சங்கம் செயற்திட்டத்தை ஆரம்பிக்கவில்லை |
| (xxi) | சமகி மாவத்தையின் இரண்டாம் கட்ட அபிவிருத்தி | 1,000,000 | உடன்படிக்கை செய்து கொண்ட சங்கம் செயற்திட்டத்தை ஆரம்பிக்கவில்லை. |

**(ஆ) செயற்திட்டத்தை நிறைவேற்றாது கைவிடுதல்**

மாவட்டச் செயலகம் பின்வரும் செயற்திட்டங்களை ஆரம்பித்திருந்தபோதும், அச்செயற்திட்டங்களை நிறைவேற்றாது கைவிடப்பட்டிருந்தது.

| | செயற்திட்டம் | மதிப்பீட்டுக் கிரயம் | ஆரம்பித்த திகதி | 2015 திசெம்பர் 31 உள்ளவாறான செலவினம் | கைவிட்டதற்கான காரணம் |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | | ரூபா | |
| (i) | ரொக்கில் வத்த தொடக்கம் டின்சின் வரை வீதியை நிர்மாணித்தல் | 625,000 | - | 98,000 | வீதி அபிவிருத்தி அதிகாரசபை வீதியை முற்றாகத் தயாரிக்குமாறு ஆலோசனை வழங்கியமை |
| (ii) | யத்தல - தெபுவ வீதியில் கொங்கிரீட் இடல் | 625,00 | - | 98,000 | இதில் ஒருபகுதி யட்டியாந்தோட்டை பிரதேச செயலகத்திற்கு உரியதாகையால் ஆரம்ப ஸ்தானம் மாத்திரம் தயாரிக்கப்பட்டுக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தமை |
| (iii) | யத்தல - தெபுவ வீதியை நிர்மாணித்தல் | 1,250,000 | - | 218,920 | -மேற்படி- |
| (iv) | 506E மடுமான எட்டம்ப ஓயா மடுமான வரையான வீதி | 500,000 | 2015.9.8 | - | காணிப் பிரச்சினையால் செயற்திட்டம் நிறைவேற்றப்படாமை |
| (v) | 506E மடுமான | 500,000 | 2015.10.10 | - | - மேற்படி - |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | தெஹிகொட்டுவ தொடக்கம் வெரல்லகெட்டிய வீதி வரை | | | | |
| (vi) | 524D தப்பரே கெட்டமில்லாகொட வீதியில் மதகு அமைத்தல் | 500,000 | 2015.10.10 | | சிரற்ற காலநிலை மற்றும் பொருள்களை வழங்குவதில் வசதியின்மை |
| (vii) | 504E குருந்து ஓயா டார்லி வெலி கோவில் வீதியைப் புனரமைத்தல் | 100,000 | 2015.11.29 | | - மேற்படி - |
| (viii) | 518 உடமாதுர வித்தியாலயத்தின் நுழைவு விதி (கமநெகும விசேடம்) | 300,000 | - | | இவ்வித்தியாலத்தின் விளையாட்டு மைதானத்தை விளையாட்டுத்துறை அமைச்சு மேற்கொள்கையில் அச்செயற்திட்ட நடவடிக்கைகளுக்கு இயந்திர சாதனங்களைப் பயன்பாட்டு சிற்றுழைபாதை 3 பயன்படுத்தப்படுவதால் விளையாட்டு மைதான நடவடிக்கைகள் முடிவடையும் வரை செயற்திட்ட நடவடிக்கைகளை ஆரம்பிக்க முடியாமையும் விளையாட்டு மைதான நடவடிக்கைகள் ஆண்டின்போது முடிவடையாமையும் |

**(இ) செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்**

மாவட்டச் செயலகம் பின்வரும் செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம் அவதானிக்கப்பட்டது.

| | செயற்திட்டம் | மதிப்பீட்டுக் கிரயம் | ஆரம்பித்த திகதி | முடிவடைய வேண்டிய திகதி | முடிவடைந்த திகதி | 2015 திசெம்பர் 31 ஆந் திகதியளவிலான செலவினம் | தாமதத்திற்கான காரணம் |
|---|---|---|---|---|---|---|---|
| (i) | பண்டாரநாயக்காபுர குடிநீர் செயற்திட்டம் | 700,000 | 2015.12.23 | 2015.12.31 | 2016.01.23 | 54,081 | ஒப்பந்தச் சங்கத்தின் தாமதம் |
| (ii) | அப்கட், திரு சமனின் வீட்டினருகேயிருந்து கிராமம் வரையிலான வீதி | 148,499 | 2015.05.17 | 2015.08.14 | 2015.12.05 | 142,261 | சீரற்ற காலநிலை |
| (iii) | அப்கட் வீதி தொடக்கம் பொது நீர்த்தாங்கி வரையான பாதை | 148,565 | 2015.05.13 | 2015.08.13 | 2015.12.20 | 142,565 | - மேற்படி - |
| (iv) | மஸ்கெலியா கல்யாணி பேக்கரியின் அண்மையிலிருந்து DMD வரை படிகளை அமைத்தல் | 148,505 | 2015.05.05 | 2015.08.05 | 2015.09.03 | 142,505 | - மேற்படி - |
| (v) | மங்கெலிய மூரி ஸ்டோர்ஸ் தொடக்கம் DMD வரை படிகளை அமைத்தல் | 148,457 | 2015.05.05 | 2015.08.05 | 2015.09.23 | 142,457 | - மேற்படி - |
| (vi) | பனம்கம்மன புவக்மல் பிதுகொட விஹாரையின் அறநெறிப் பாடசாலைக் கட்டிடத்தை நிர்மாணித்தல் | 1,000,000 | 2015.07.21 | 2015.09.04 | - | 400,000 | ஒப்பந்தகாரர் செயற்திட்டத்தை பூர்த்தி செய்யாமை |

**(ஈ) பணம் விடுவிக்கப்பட்டிருந் போதும் நோக்கங்கள் நிறைவேறியிறாத சந்தர்ப்பங்கள்**

---

எதிர்பார்த்த நோக்கத்தை நிறைவேற்ற முடியாது போன செயற்திட்டங்கள் தொடர்பான விபரங்கள் கீழே காணப்படுகின்றன.

(i) சுற்றுலாத்துறை மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சினது நிதியேற்பாட்டுடன் நுவரெலியா மாவட்டச் செயலகம் அமுலாக்கிய ரூபா 8,483,842 உடன்படிக்கைத் தொகையிலான பொரமடுல்ல மத்திய மஹா வித்தியாலய விளையாட்டு மைதான அபிவிருத்தி வேலையின் போது குறித்த, தேவையான நடவடிக்கைகளை வேலையை வழங்குவதற்கான பத்திரத்தில் சேர்த்துக்கொள்ளாது மாவட்டப் பொறியியலாளர் அவ்வப்போது ஆலோசனைகளை வழங்கியிருந்தார். வேலை ஆரம்பமாகி 03 மாதங்களின் பின்னர் விளையாட்டு மைதானத்தின் கூரையை அமைப்பதற்கான விரிவான திட்டம் ஒப்பந்தகாரருக்கு வழங்கப்பட்டிருந்தது. கட்டிடத்திற்கு நுழையும் படிகள் மழையில் நனையும் வண்ணம் தயாரிக்கப்பட்டிருந்தபோதும், கூரை மிகவும் உயரத்தில் நிர்மாணிக்கப்பட்டிருநத்தால் மழைக் காலத்தில் பார்வையாளர் படியும் மழையில் நனையும் நிலை ஏற்பட்டிருந்தது. கட்டிடத்தில் கழிவறை வசதிகள் மற்றும் விளையாட்டு வீரர்கள் உடைகள் மாற்றிக்கொள்வதற்கான அறையுமின்றி திட்டமிடப்பட்டிருந்ததுடன், கட்டிடக் கொங்ரீட்டின் நியமம் நலிவான நிலையில் இருந்தது. ஒப்பந்தகாரருக்கு ரூபா 48,728 கூடுதலாக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ii) விளையாட்டுத் துறை அமைச்சின் நிதியேற்பாட்டுடன் ரூபா 1,786,400 உடன்படிக்கைத் தொகையில் அமுலாக்கப்பட்ட அதிகாரிகம பொது விளையாட்டு மைதான அபிவிருத்தி வேலையை நிறைவேற்றும் போது விளையாட்டு மைதானத்தின் மத்தியில் காணப்பட்ட கருங்கற்கள் அகற்றப்படாதிருந்தன. மதிப்பிடப்பட்டதன் பிரகாரம் விளையாட்டு மைதானத்தைச் சுற்றிவர வடிகான் முறைமையும் நிர்மாணிக்கப்பட்டாமையால் மண் கழுவிச் செல்லப்படுவதற்கான அபாயமும் நிலவியது.

(iii) நுவரெலியா பிரதேச செயலகத்தால் அமுலாக்கப்பட்ட கல்பாலம அறநெறிப் பாடசாலையின் பொது வசதி அபிவிருத்திச் செயற்திட்டத்திற்குரிய கட்டிடத்தில் 3 அடி உயரச் சுவர் அமைப்பதற்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. நிலவுகின்ற காற்றுடன் கூடிய காலநிலை மற்றும் மழைக் காலங்களில் அக்கட்டிடத்தை பயன்படுத்துவது சிக்கலாக இருந்தமையால் கட்டிடம் 2016 மே 13 ஆந் திகதியளவிலும் குறைவாகவே பயன்படுத்தப்பட்டவாறிருந்தது. 9'' செங்கற் சுவர்களுக்குப் பதிலாக 6'' சுவர்களே அமைக்கப்பட்டிருந்தன. பொறியியல் செங்கற்களுக்குப் பதிலாக, அரசாங்கக் கட்டிடங்களுக்கு அங்கீகரிக்கப்படாத பெரிய செங்கற்கள் பயன்படுத்தப்பட்டிருந்தன. கொடுப்பனவு செய்யப்பட்ட தொகைக்கும் அதிகமாக 2.29 $M^3$ குறைவான சுவரே அமைக்கப்பட்டிருந்தது. மதிப்பிடப்பட்ட நியமத்திற்கமையாது நிர்மாண வேலைக்கு ரூபா 65,732 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. கலாதவெல பொடி பயன்படுத்தப்பட்டு வேலை முடிவடையாத போதும், அதற்குக் ரூபா 97,574 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(iv) நுவரெலியா பிரதேச செயலகத்தால் அமுலாக்கப்பட்ட ரத்னகிரி குடியேற்றத்தின் முதலாம் ஒழுங்கையை நிர்மாணிக்கும் செயற்திட்டத்தின்போது 75.6 $m^3$ கொங்ரீட்டைப் பயன்படுத்துவதென மதிப்பிடப்பட்டிருந்தது. வீதிக்கென 41.7 $m^3$ அல்லது 55 சதவீத கொங்கிரீட் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. வீதியை ஊடறுத்து இரு மருங்கிலும் மண்ணை நிரப்பி பக்கச் சுவர்களை அமைப்பதற்கு மதிப்பிடப்பட்டபோதும், வீதி மிக ஆழமாகத் தோண்டப்பட்டிருந்தது. அது கொங்கிரீட் இடப்பட்டிருந்த போதும், முச்சக்கர வண்டியேதும் பயணஞ் செய்ய முடியாதவாறு வசதியற்றிருந்தது. இரு மருங்கிலும் பக்கச் சுவர்கள் அமைக்கப்பட்டதால் வீதியில் போடப்பட்ட மண் கழுவிச் செல்லப்பட்டுப் பாழடைந்திருந்தது.

(v) நுவரெலியா பிரதேச செயலகத்தால் அமுலாக்கப்பட்ட வட்டகொட மேற்பகுதிக்கு நீர் வழங்கும் செயற்திட்ட நிர்மாண வேலை 2015 திசெம்பர் 31 அன்று முடிவடைந்து ரூபா 772,553 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. எனினும், நீர்த் தாங்கியிருந்து கீழே நீரைக் கொண்டு செல்லும் குழாயானது நிலத்தில் புதைக்கப்படாது பாதுகாப்பில்லாது இருந்தது. இந் நீர்த்தாங்கியானது இயற்கையான ஓடையொன்றை ஊடறுத்து நிர்மாணிக்கப்பட்டிருந்ததால் பொது மக்களுக்கு வழங்கப்படும் நீர் சுத்தமற்றதாக இருப்பது அவதானிக்கப்பட்டதுடன், 2016 ஏப்ரல் 26 ஆந் திகதியளவில் வாவியின் நீர்ப்பாதையில் ஏறக்குறைய 80 சதவீதம் வினாகியிருந்தது. அதற்கமைய, நீர் இல்லாத காலங்களில் அதனைப் பயன்படுத்தப்பட முடியாதமையால் செயற்திட்டத்தின் எதிர்பார்த்த நோக்கம் நிறைவேறியிருக்கவில்லை.

**(உ) செயற்திட்டங்கள் முறையற்றவாறு அமுலாக்கப்பட்ட சந்தர்ப்பங்கள்**

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2013 முதல் 2015 வரை கொத்மலே பிரதேச செயலகக் கணக்காளரது உத்தியோகபூர்வ மனையை நிர்மாணிப்பதற்கு ரூபா 7,519,693 செலவிடப்பட்டிருந்தது. 2016 பெப்ரவரி 18 ஆந் திகதியளவிலும் அது வசிப்பதற்கு தகுதியானவாறு நிர்மாணிக்கப்பட்டிருக்கவில்லை. நுழைவுப் பாதையிலும் கட்டிடத்தைச் சுற்றியுள்ள வலைகளும் நலிவான மட்டத்திலே காணப்பட்டன. பக்கச் சுவர்களை அமைப்பதற்கென $154m^3$ மண் அகற்றப்பட்டிருந்த போதும். நிலத்திலிருந்து $317.69m^3$ மண் கிலோ மீட்டர் தூரத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு ரூபா 98,801 மேலதிகமாகக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அரசாங்கப் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 8.13.4 வழிகாட்டலுக்கமைய கொள்வனவு நிறுவகத்திற்கு அங்கீகரிக்கப்படக்கூடிய அதி கூடிய ஒப்பந்த வேறுபாட்டுத் தொகை 10 சதவீதமாகும். எனினும், 2015 ஆம் ஆண்டின் இந் நிர்மாண வேலைக்கு மதிப்பீட்டிலும் 13 சதவீதம் கூடுதலாக அமைச்சின் செயலாளரது அங்கீகாரமின்றி மேலதிக வேலை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ii) 2013 தொடக்கம் 2015 வரை கொத்மலே பிரதேச செயலாளரது உத்தியோகபூர்வ மனையை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன், 3 ஆண்டுகளின்போது ரூபா 10,835,938 பெறுமதியான வேலை நிறைவடைந்திருந்தது. 2016 பெப்ரவரி 18 ஆந் திகதியளவிலும் அந் நிர்மாணம் குடியிருப்பதற்கு பொருத்தமாக அமைந்திருக்கவில்லை. கட்டிடத்தின் பின்பகுதி, கட்டிடத்தைச் சுற்றிவர அமைந்த வலை என்பன நலிவான மட்டத்திலிருந்தன. நிலத்தைக் கொங்ரீட் இட்டு சுத்தப்படுத்துவதற்கு 2014 ஆம் ஆண்டில் ரூபா 179,730 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. 2015 ஆம் ஆண்டில் அதில் ஒரு பகுதியில் நில ஓடுகளைப் பதிப்பதற்காக ரூபா 283,614 செலவழித்தமையால் அரசாங்கத்திற்கு நிதி இழப்பு ஏற்பட்டிருந்தது. பக்கச் சுவர்களை அமைப்பதற்காக $51.44\ m^3$ மண்ணை அகற்றுவதற்கு மதிப்பிடப்பட்டபோதும், $305.13m^3$ மண் அகற்றப்பட்டதாக ரூபா 202,952 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. பொருட் கொள்வனவின் பொருட்டு அங்கீகரிக்கப்படக்கூடிய அதி கூடிய வேறுபாட்டுத் தொகை 10 சதவீதமே ஆயினும், அமைச்சினது செயலாளரின் அங்கீகாரமின்றி மதிப்பீட்டிலும் 22 சதவீதம் கூடுதலாக மேலதிக வேலை நிறைவேற்றப்பட்டிருந்தது.

(iii) உடன்படிக்கைத் தொகையான ரூபா 3,538,350 உடன் கூடிய ஹஸ்கரன்கெத்த சிறிமாவோ பண்டாரநாயக்கா வித்தியாலய விளையாட்டு மைதான வேலை 2015 திசெம்பர் 20 ஆந் திகதிக்கு முன்னர் நிறைவேற்றப்பட வேண்டியபோதும், 2016 பெப்ரவரி 29 ஆந் திகதியளவிலும் அது நிறைவேற்றப்படாதிருந்தது. வடிகால் அமைப்பிற்கென 2016 திசெம்பர் 31 அந் திகதியளவில் ரூபா 570,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதும், 2016 பெப்ரவரி 29 ஆந் திகதியளவிலும் அதன் முற்கட்ட வேலை நடைபெற்றவாறிருந்தது. விளையாட்டு மைதானத்தைச் சுற்றி அமைக்கப்பட்ட வலைமேவுகை மதிப்பீட்டிற்குப் புறம்பாக அமைந்திருந்த போதும்,

அதற்கு ரூபா 585,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. நுழைவு பாதை துூரத்துக்கு அப்பால் அமைக்கப்பட வேண்டியதால் விளையாட்டு மைதானம் ஏறக்குறைய 15-20 அடி அகலம் பயனற்றிருந்தது.

(iv) அம்பகமுவ பிரதேச செயலகக் கட்டிடத்தின் மேல் மாடியின் எஞ்சிய வேலை பூர்த்தி செய்யப்பட்டதாக 2015 திசெம்பர் 31 ஆந் திகதியன்று ரூபா 6,703,665 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. எனினும், அதில் உள்ளடங்கிய ரூபா 331,534 பெறுமதியான 02 விடயங்கள் 2016 பெப்ரவரி 16 ஆந் திகதியளவிலும் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. 04 ஆம் வேலை விடயங்களின் கீழ் ரூபா 347,700 மிகை கொடுப்பனவும் 13 ஆம் வேலை விடயத்திற்கு ரூபா 349,393 எனவும் கூடுதலாக வழங்கப்பட்டிருந்ததுடன், முறையான அங்கீகாரமின்றி 08 மேலதிக விடயங்களுக்கு ரூபா 528,179 வழங்கப்பட்டிருந்தது. இவ் வேலை 2015 திசெம்பர் 28 ஆந் திகதியளவில் முடிவடைய வேண்டியிருந்தபோதும், கால நீடிப்பு வழங்கப்பட்டதற்கான சான்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. ஆகவே, 2016 பெப்ரவரி 16 ஆந் திகதியளவில் அறவிடப்பட வேண்டியிருந்த குறைந்தளவு தாமதக் கட்டணமாகிய ரூபா 172,215 அரசிற்கு ஏற்பட்ட இழப்பாகும். நிர்மாண வேலை முடிவுற்று 2016 மே 25 ஆந் திகதியளவிலேனும் ஒப்பந்தகாரரால் பிரதேச செயலாளரிடம் கட்டிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.11 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

நுவரெலியா மாவட்டச் செயலகத்தால் மேற்கொள்ளப்பட்ட சில கொடுக்கல் வாங்கல்கள் சர்ச்சைக்குரிய தன்மை வாய்ந்தனவாகும். தெரிவுச் செவ்வையின்போது கண்டறியப்பட்ட அவ்வாறான கொடுக்கல் வாங்கல்கள் சிலவற்றின் விபரம் வருமாறு.

(அ) வலப்பன்னே பிரதேச செயலகத்தில் 2013 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் ரூபா 218,119 ஓய்வூதியத்தை குறித்த ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு வழங்கப்படாது வைப்புக் கணக்கிலிடப்பட்டிருந்தது.

(ஆ) கொத்மலே, பிரதேச செயலகத்திற்குரிய 07 திவிநெகும பிரஜாமூல வங்கி / சங்கங்களில் 03 ஆண்டுகளாக செயற்பாட்டு நட்டத்தில் இயங்கின. ரூபா 4,730,683 நட்டக் கடன் இருந்ததுடன் சமுர்த்தி நலன்பெறுநருக்கு வழங்கப்படும் ரூபா 2,500 தொகையில் ரூபா 22,712,999 மீளளிக்கப்படாது இருந்தமையே இதற்கான பிரதான காரணமாகும்.

### 3.12 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

மாவட்டச் செயலகம் மேற்கொண்ட கொடுக்கல் வாங்கல்களில் சில முறையற்றவாறிருந்தன. அவதானிக்கப்பட்ட அவ்வாறான சில சந்தர்ப்பங்கள் வருமாறு.

(அ) அரசாங்க கொள்வனவு வழிகாட்டி நடைமுறையிலிருந்து விலகல்

இது சம்பந்தமாகப் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அரசாங்க பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 2.7.5 ஆம் வழிகாட்டலின் பிரகாரம், பாரிய ஒப்பந்தங்களிற்கு கொள்வனவு நடைமுறையிலிருந்து விலகி வெளி அங்கத்தவர் ஒருவர் கொள்வனவு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படாது கொள்வனவு வழிகாட்டியைச் சேர்ந்த ஒருவரை மூன்றாவது அங்த்தவராக இணைத்து ரூபா 76,906,691 பெறுமதியான 15 தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(ii) அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 3.3 ஆம் வழிகாட்டலில் மேவுகை செய்யப்படாத போதிலும் ரூபா 67,822,675 பெறுமதியான

வரையறுக்கப்பட்ட கூறு விலைகள் கோரப்பட்டு கொள்வனவுத் தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(iii) 2015 கொள்வனவுத் திட்டத்திற்கமைய, 05 மூலதன செலவின விடயங்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்ட ரூபா 13,750,000 நிதியேற்பாட்டின் மூலம் தேசிய போட்டியுடன் கூடிய கூறு விலைக் கோரலின் மூலம் கொள்வனவு இடம் பெற வேண்டியிருந்த போதும், சந்தை விலை முறைமையைக் கடைப்பிடித்து கொள்வனவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(iv) கொள்வனவுத் திட்டத்தின் பிரகாரம் மார்ச் மாதத்தில் ஆரம்பிக்கப்பட வேண்டிய கொள்வனவு நடவடிக்கைகள் 2015 யூலை மாதமளவிலும் தாமதிக்கப்பட்டு வேலை ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

(v) கொள்வனவுத் திட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டிருந்த 05 செயற்திட்டங்களுக்குப் பதிலாக 03 செயற்திட்டங்களே செயற்படுத்தப்பட்டமையால், ரூபா 20.6 மில்லியனிலான அம் 03 செயற்திட்டங்களிலும் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 2.6 மில்லியனுக்கான வேலை மாத்திரமே முடிவடைந்திருந்தது.

(vi) அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 1.2 மற்றும் 3.3 ஆம் வழிகாட்டலிருந்து விலகி மட்டுப்படுத்தப்பட்ட கூறு விலைகளைக் கோரியும், கை மூலம் கூறு விலைகளைப் பெற்றும், கூறு விலைகள் திறக்கப்படும் தினத்திற்குப் பின்னர் சமர்ப்பிக்கப்பட்ட கூறு விலைகளை ஏற்றுக்கொண்டும் போதிய கூறு விலைகள் இன்றி கொள்வனவை வழங்கியதுடன் ஒரே நிறுவனத்திடமிருந்து பல்வேறு பெயர்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட கூறு விலைகளை அடிப்படையாகக் கொண்டு கொள்வனவுகளை வழங்கியும் எதுவித வெளிப்படையுமின்றி வலப்பனே பிரதேச செயலகத்தால் ஆண்டின்போது ரூபா 4,051,317 பெறுமதியான கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

## 3.13 நட்டங்களும் இழப்புகளும்

---------------------------------------------------

கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனைகளின்போது வெளியாகிய நட்டங்களும் இழப்புகளும் பின்வருமாறு

(அ) விளையாட்டுத்துறை அமைச்சினது நிதியேற்பாட்டின் மூலம் அமுலாக்கப்பட்ட ரூபா 2,010,000 கூட்டுத் தொகையிலான உனன்தென்ன பொது விளையாட்டு மைதான அபிவிருத்தி வேலையின்போது வெளியிலிருந்து மைதானத்திற்கு 367$m^3$ மண்ணைக் கொண்டு வருவதற்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. எனினும், மைதானத்திற்கு வழங்கப்பட்ட (1204.8$m^3$) மண் யாவும் வெளியிலிருந்து வழங்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டு ரூபா 843,360 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இதன் காரணமாக, மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்ட பெறுமதியை விட ரூபா 586,400 அதிகமாகக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) பகல் நேரப் பராமரிப்பு நிலையை நிர்மாண வேலை ஒப்பந்தம் ஒன்று சம்பந்தமான உடன்படிக்கைப் பிரகாரம் தாமதக் கட்டணமாக ஒப்பந்தக்காரிடமிருந்து ரூபா 114,410 அறவிடப்பட்டிருக்கவில்லை.

(இ) பகல் நேரப் பராமரிப்பு நிலையத்தை நிர்மாணிக்கும் ஒப்பந்தத்தின்போது அரசாங்கத்தின் அங்கீகரிக்கப்பட்ட பொறியியல் செங்கற்களுக்குப் பதிலாக அரசாங்கக் கட்டணங்களுக்கு அங்கீகரிக்கப்படாத செங்கற்களைப் பயன்படுத்தி ரூபா 940,800 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) 2015 சுற்றுலாத்துறை மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் ரூபா 1,000,000 நிதியேற்பாட்டின் கீழ் ஆலோக்கபெத்த மஹா வித்தியாலய விளையாட்டு மைதானத்தை அபிவிருத்தி செய்து ரூபா 980,000 கொடுப்பனவு செய்யப்பட்டபோதும், 2015 திசெம்பர் 25 ஆந் திகதியன்று மதிற்சுவர் இடிந்து வீழ்ந்திருந்தது. இது சம்பந்தமாக நிதிப் பிரமாணம் 104 இன் பிரகாரம் நட்டத்தை நிர்ணயித்து அதற்குப் பொறுப்பான உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கவோ அல்லது நட்டத்தை அறவிடவோ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

### 3.14 தீர்த்து வைக்கப்படாத கணக்காய்வுப் பந்திகள்

மாவட்டச் செயலகத்திற்குரிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் உள்ளடங்கிய கணக்காய்வுப் பந்திகளில் சுட்டிக் காட்டப்பட்ட குறைபாடுகள் சம்பந்தமாக மாவட்டச் செயலகத்தால் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிராத பந்திகளுடனான தொடர்பு பின்வருமாறு

| கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையுடனான தொடர்பு | | தொடர்புடைய விடயம் |
|---|---|---|
| ஆண்டு | பந்தி இலக்கம் | |
| 2012 - centre | 1.8 (அ) VII | முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள் |
| 2013 - centre | 1.7 (அ) I,II | சொத்து முகாமைத்துவம் |
| 2013 | 1.7 (இ) | சொத்து முகாமைத்துவம் |
| 2013 | 1.8 (அ) V,II | இணங்காமை |
| | 1.14 III | முகாமைத்துவ நலிவுகள் |
| 2014 | 3.8 | சொத்து முகாமைத்துவம் |
| | 3.9 | இணங்காமை |
| | 3.11 | முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள் |
| | 3.14 | முகாமைத்துவ நலிவுகள் |

### 3.15 முகாமைத்துவ நலிவுகள்

கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையின்போது பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) சிரேஷ்ட பிரஜைகள் படியாகக் கொடுப்பனவு செய்வதெற்கென 2 பிரதேச செயலகங்களால் 2015 சனவரி முதல் திசெம்பர் வரை அஞ்சல் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட தொகை ரூபா 72,948,000 ஆகும். அதில் ரூபா 3.340,000 கொடுப்பனவு செய்யப்படாது திருப்பி அனுப்பப்பட்டிருந்தது. இப்படியைப் பெறுவதற்கு உரியவர்களை இனங்காண்பதும் தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்வதும் நலிவான நிலையில் இருந்தன.

(ஆ) இடர் முகாமைத்துவ அமைச்சின் 2013 யூலை 18 ஆந் தககிய 01/2013 ஆம் இலக்க ஜா.ஆ.ச.சே.ம வழிகாட்டலுக்கமைய அனர்த்தம் ஏற்பட்ட ஓராண்டுக்குள்

வீடமைப்பு உதவிப் பணக் கொடுப்பனவு முடிவுக்கு வர வேண்டுமெனினும், 03 பிரதேச செயலகங்களில் 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் அனர்த்திற்குள்ளான 138 வீடுகளின் பொருட்டு 2015 நவம்பர் மாதமளவிலும் ரூபா 15,319,955 உதவிப் பணம் வழங்கப்படாதிருந்தது.

(இ) கினிகத்தேனை / ஹட்டன் மற்றும் விதுலிபுர சமுதாய அடிப்படை வங்கிகளில் ரூபா 5,320,984 பெறுமதியான பங்குப் பணமும் வைப்புப் பணமும் பயனற்றவாறிருந்தது.

(ஈ) பிரதேச செயலகம் ஒன்றிற்கு 1982 ஆம் ஆண்டு முதல் கிடைக்கப் பெற்றிருந்த 116 காணிப் படிப் பத்திரங்கள் உரித்தானவர்களுக்கு வழங்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படாது வைக்கப்பட்டிருந்தன.

(உ) 1997 ஒக்டோபர் 10 ஆந் திகதியன்று வெளியிடப்பட்ட சமுர்த்தி வங்கிச் செயற்பாட்டுப் பத்திரம் இலக்கம் நான்கிற்கு இரண்டாவது இணைப்பாக வெளியிடப்பட்ட வழிகாட்டலில் உள்ள 3.7 உப பந்திக்கமைய ஐயக் கடனுக்கு நிதி ஏற்பாடு செய்யப்பட்டதன் பின்னர் காலத்துக்குக் காலம் கடன்பட்டோரிடமிருந்து இவை அறவிடப்பட வேண்டுமெனினும், 2015 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் 3 பிரதேச செயலகப் பிரிவுகளில் ரூபா 5,649,885 அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஊ) காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சின் செயலாளரது 2012 மே 24 ஆந் திகதிய 4/3/1/201/48 ஆம் இலக்கக் கடிதத்தின் பிரகாரம் காணிச் சுவீகரிப்பு நடவடிக்கைகள் 72 வார காலத்துள் நடைபெற வேண்டுமெனினும், 2006 முதல் 2014 மார்ச் வரையான காலப்பகுதியில் காணிச் சுவீகரிப்புக்கென வைப்பிலிடப்பட்ட ரூபா 13,679,810 குறித்த பணிக்கும் பயன்படுத்தப்படாதிருந்தது. தாமதமாக இழப்பீடு வழங்கப்படும்போது கூடுதல் வட்டி செலுத்தப்படுவதற்கான அபாயமொன்று நிலவியது.

(எ) பிரதேச செயலகப் பிரிவு ஒன்றினது 07 பிரஜா மூல வங்கிகளின் கீழ் 2015 செப்தெம்பர் 30 இல் உள்ளவாறு அறவிடப்பட்ட வேண்டியிருந்த மிஹிஜய சஹண வட்டிக் கடன் மீதியாகிய ரூபா 3,388,885 மற்றும் ஜன புபுது வட்டிக் கடன் மீதி ஆகிய ரூபா 3,100,718 என்பன அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஏ) இலங்கை சமுர்த்தி அதிகாரசபையின் நிதி நடவடிக்கைப் பிரிவு வெளியிட்ட வங்கி நடைமுறை ஆலோசனைச் சுற்றறிக்கை இலக்கம் 24 இன் பிரகாரம், திரிய மாதா கணக்கை ஆரம்பித்து அதன் நோக்கத்தையும் இலக்கையும் நிறைவேற்றிக் கொள்ள வேண்டுமாயினும், கொத்மலே பிரதேச செயலகப் பிரிவில் 2007 முதல் ஆரம்பமாகிய திரிய மாதா கணக்குகளில் ரூபா 451,166 பயனற்றவாறிருந்தது.

(ஐ) கொத்மலே பிரதேச செயலகப் பிரிவில் உள்ள சமுர்த்தி வங்கி அங்கத்தவர் பங்கு முதல் மற்றும் வைப்புப் பணமாகிய ரூபா 5,963,432 பயனற்றிருந்தது.

(ஒ) கொத்மலே பிரதேச செயலகப் பிரிவில் திவிநெகும நிதி வங்கியின் மூலம் சீவனோபாயச் செயற்திட்டத்திற்காக சமுர்த்தி நலன் பெறுநர்களது கணக்குகளில் செலவு வைக்கப்பட்ட ரூபா 432,575 அச் செயற்திட்டங்கள் செயற்படுத்தப்படாமை காரணமாக பயனற்றிருந்தன.

(ஓ) ஹல்குரன்கெத்த பிரதேச செயலகப் பிரிவுக்குரிய பிராஜா மூல வங்கியில் ரூபா 27,319,427 பெறுமதியான பங்குப் பணமும் வைப்புப் பணமும் பயனற்றிருந்தன.

(ஔ) நுவரெலியா பிரதேச செயலகத்தால் அமுல்படுத்தப்படும் பார்க் பண்டாரறாயகா ஒற்றையடிப் பாதையை கொங்ரீட் இடும்போது 19,055 அடிக்குக் கொடுப்பனவு வழங்கப்பட்டிருந்தது. இரசாயன கூட அறிக்கையின் பிரகாரம் ஒரு மாதிரி முறையான நியமத்திற்கமைய இருக்கையில் ஏனைய மாதிரி(SMPLE) நியமத்திற்கு அமையாதிருந்தது. ஆயினும், தொழில்நுட்ப உத்தியோகத்தரால் வழங்கப்பட்ட

பரிந்துரையின் படி நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ரூபா 196,000 தொகையானது 2016 மார்ச் 30 ஆந் திகதியன்று விடுவிக்கப்பட்டிருந்தது.

(க) நுவரெலியா பிரதேச செயலகத்தால் அமுலாக்கப்பட்ட கிழக்கு கந்தப்பொல ஜினேந்திராராம அறநெறிப் பாடசாலைக் கட்டிட நிர்மாண வேலையின் போது பயன்படுத்தப்பட்ட பிளொக் கற்கள் நியமப்படி அமையவில்லை. சுவர் அமைப்பதும் நலிவாகவே முடிவடைந்திருந்தது. அதற்குக் கொடுப்பனவு செய்யப்பட்ட தொகை ரூபா 248,157 ஆகும். கட்டிடத்தின் மூன்றாம் மாடி பிரதேச செயலகத்தால் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. மூன்றாவது மாடியை நிர்மாணிப்பதாயின் போதியளவு தூண்கள் இரண்டாவது மாடியில் இருக்க வேணடுமெனினும், இரண்டாவது மற்றும் மூன்றாவது மாடிகளை இணைக்கும் சக்தி மிக்க தூண் இருக்கவில்லை. 4 பலகைகள் மூலம் முடிவடைந்திருந்த கூரைகள் இரண்டு ஆக அளவையிடப்பட்டு இருந்தமையால் அவற்றை அளவிட முடியவில்லை. BSR ரேட்டின் RO43, RO44, RO45 என்பவற்றின் பிரகாரம் கூரைக்கான பலகைகளுக்கு ரேட் இருந்த போதும், தொழில்நுட்ப உத்தியோகத்தரால் BSR ரேட் தயாரிக்கப்பட்டு ரூபா 382,867 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

## 3.16 மனிதவள முகாமைத்துவம்

### அங்கீகரித்த பதவியணியும் உள்ளவாறான பதவியணியும்

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணி நிலைமை பின்வருமாறு

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | உள்ளபடியான பதவியணி | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மேலதிக எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 33 | 25 | 09 | 01 |
| (ii) | மூன்றாம் நிலை மட்டம் | 16 | 09 | 07 | - |
| (iii) | இரண்டா நிலை மட்டம் | 845 | 740 | 108 | 03 |
| (iv) | ஆரம்ப மட்டம் | 82 | 75 | 10 | 03 |
| | மொத்தம் | 976 | 849 | 134 | 07 |